## தாமிரபரணி ஆற்றில் – மேலநத்தம் –

# கருப்பந்துறை இடையே உயர்மட்டப் பாலம் அமைத்திடுவீர்!

## சட்டப்பேரவையில் பாளையங்கோட்டை மு.அப்துல் வகாப் பேச்சு!

**சென்னை,செப்.1- பாளையங்கோட்டை தொகுதி, தாமிரபரணி ஆற்றில் மேலநத்தத்திற்கும் - கருப்பந்துறைக்கும் இடையே உள்ள தரை மட்டப் பாலத்தை உயர்மட்ட பாலமாக உயர்த்த வேண்டும் என்று சட்டப்பேரவையில் கழக உறுப்பினர் மு.அப்துல் வஹாப் பேசுகையில் குறிப்பிட்டார்.**

பேரவையில் மு.அப்துல் வகாப் பேசியதாவது:

பேரவை துணைத் தலைவர் அவர்களே, சமூக நீதிக்கு வித்திட்ட பகுத்தறிவுத் தந்தை பெரியார்; சமத்துவம் காத்திட்ட பேரறிஞர் அண்ணா; மொழி மானம், இனம் மானம், தன்மானம் காத்து தமிழரை தலைநிமிரச் செய்த திராவிட இயக்கத்தின் தன்னிகரில்லா பேரரசர்; தங்கத் தமிழ் கொண்டு, வங்கக் கடல் தாலாட்டும், திராவிட வேந்தர், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுக்கு முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2021 ஆம் ஆண்டு மற்றும் 2026 ஆம் ஆண்டு ஆகிய ஆண்டுகளின் இரண்டு சட்டமன்றத் தேர்தல்களிலும், பாளையங்கோட்டை தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், களம் காண வாய்ப்பளித்த, பண்பாட்டு பகலவன், பார் போற்றும் நல்லவர், அவதூறுகளையும், துரோகங்களையும் பொது வாழ்க்கையில் எதிர்கொண்டு மனம் கலங்காமல் மக்களுக்காகப் பயணித்த மாமன்னர். சினம் பொங்கும் அளவிற்கு சிறியோர் தம் இழிமொழி, பழிமொழிகளைப் பொருட்படுத்தாமல் அலட்சியப்படுத்தி, பகை நடுங்கிட படைகலன் ஏந்தி, தமிழ் மக்களுக்கு, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு தன்னை அர்ப்பணித்து அரும்பணி ஆற்றி, ஓய்வுக்கு ஓய்வு கொடுத்த உழைப்புச் சூரியன். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் என் உயிரினும், மதிப்பிற்கும், உயிரினுக்கும் மேலான தலைவர், மதிப்பிற்குரிய முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டின் முன்னாள் துணை முதலமைச்சராக இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு அல்லும் பகலும் அயராது பாடுபட்டு, இன்று தமிழ்நாடு சட்டப்பேரவையின் எதிர்க்கட்சி தலைவராக இருந்து, சட்டமன்றத்தில் எங்களை வழிநடத்துகின்ற உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) திருநெல்வேலி மாவட்டத்தின் முன்னாள் பொறுப்பு அமைச்சராக இருந்து, சிறப்பான முறையில் செயலாற்றி, மாவட்ட வளர்ச்சிக்கு நல்ல பல திட்டங்கள் கிடைத்திட அரும்பாடுபட்டு உதவிய சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய கே.என். நேரு அவர்களே,

திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய துணைப் பொதுச் செயலாளர், திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர், திருநெல்வேலியின் மண்டல தேர்தல் பொறுப்பாளராக இருந்து, திராவிட முன்னேற்றக் கழகம், தேர்தலில் நெல்லை மாவட்டத்தில் வெற்றி பெறுவதற்கு பணியாற்றிய திருமதி கனிமொழி கருணாநிதி அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்றக் கொறடா, முன்னாள் அமைச்சர் எ.வ. வேலு அவர்களே, இரண்டு சட்டமன்றத் தேர்தல்களிலும் பெருவாரியான வாக்குகள் அளித்து, என்னை அமோக வெற்றிபெறச் செய்த பாளையங்கோட்டை தொகுதி மக்களுக்கும், குறிப்பாக மேலப்பாளையம் மக்களுக்கும், எனது வெற்றிக்கு எதையும் எதிர்பாராமல் கடுமையாக உழைத்த திராவிட முன்னேற்றக் கழக நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும், கழக உடன்பிறப்புகளுக்கும், தோழமைக் கட்சியினருக்கும் இதயபூர்வமான நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

### காயிதே மில்லத் பெயரில் அறிவுசார் நூலகம்!

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாபெரும் அவையில் வீற்றிருக்கும் அனைவருக்கும், அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எனது பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் ரூ.108 கோடியில் கண்ணியமிகு காயிதே மில்லத் பெயரில் பிரம்மாண்ட அறிவுசார் நவீன digital நூலகம், ரூ.47 கோடியில் மென்பொருள் தகவல் தொழில்நுட்பப் பூங்கா, ரூ.67 கோடியில் பொருநை அருங்காட்சியகம் அமைப்பதற்கு வித்திட்ட கழகத் தலைவர், தளபதி அவர்களுக்கும், அன்றைய தினம் தொல்லியல் துறை அமைச்சராக இருந்த அண்ணன் தங்கம் தென்னரசு அவர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியினைக் காணிக்கையாக்குகின்றேன்.

குலவணிகர்புரத்தில் ரூ.125 கோடியில் Y வடிவ இரயில்வே மேம்பாலம், திருநெல்வேலி மேற்கு புறவழிச்சாலை விரிவாக்கப் பகுதிகளுக்கு தனி ய ா க திருமலைகொழுந்துபுரத்திலிருந்து சிறப்புக் குடிநீர் திட்டம், கருப்பந்துறை-மேலநத்தம் உயர்மட்டப் பாலம், ரூ.42 கோடியில் சித்த மருத்துவக் கல்லூரி இன்னும் தொகுதிக்கு நான் கேட்டதையெல்லாம் கொடுத்து, ரூ.1,000 கோடிக்கு மேல் எண்ணற்றத் திட்டப்பணிகளை நிறைவேற்றிட அள்ளி, அள்ளித் தந்து வாரி வழங்கிய வள்ளல், மக்கள் மனதில் நிறைந்திருக்கும் எங்கள் தலைவர், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றியினைக் காணிக்கையாக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

### ரூ.379 கோடியில் புறவழிச்சாலை!

எல்லோருக்கும் எல்லாம் என்ற உன்னத நோக்கத்தோடு ரூ.687 கோடியில் பாதாளச் சாக்கடைத் திட்டம், ரூ.379 கோடியில் திருநெல்வேலி மேற்கு புறவழிச்சாலை இப்படி பல்வேறு திட்டங்களை எங்களுக்கு அள்ளித் தந்த முன்னாள் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் மக்களுக்கான சிறப்புத் திட்டங்கள். 1 கோடியே 35 இலட்சம் இல்லத்தரசிகளுக்கு மாதம் ரூ.1,000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம், தினசரி 58 இலட்சம் மகளிர் கட்டணமின்றிப் பயணம் செய்யும் விடியல் பயணத் திட்டம், 20.59 இலட்சம் பள்ளிக் குழந்தைகள் பயன்பெறும் காலை உணவுத் திட்டம், 44.52 இலட்சம் மாணவ, மாணவிகள் முன்னேற்றத்திற்கு நான் முதல்வன் திட்டம், 9.21 இலட்சம் மாணவ, மாணவிகள் மாதந்தோறும் ரூ.1,000 பெறும் புதுமைப் பெண் திட்டம் மற்றும் தமிழ்ப் புதல்வன் திட்டம். ரூ.3,500 கோடியில் 1 இலட்சம் வீடுகள் அளிக்கும் கலைஞர் கனவு இல்லம். 23.70 இலட்சம் முதியோர் இல்லம் தேடி உணவுப் பொருட்கள் வழங்கும் தாயுமானவர் திட்டம், 20 இலட்சம் மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினி வழங்கும் உலகம் உங்கள் கையில் திட்டம். மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம்-நம்மைக் காக்கும் 48 போன்ற திட்டங்களை அள்ளித் தந்த முன்னாள் முதல்வர் அவர்களுக்கு நான் இந்த நேரத்தில் நன்றி கூறுகின்றேன். அதுபோல எங்கள் மாவட்டத்திற்கு 3 SIPCOT-களும், 1 SIDCO தொழிற்பேட்டையும் அமைத்து, தொழில் வளமிக்க மாவட்டமாக, அந்த மாவட்டத்திற்கு அள்ளித் தந்த அன்றைய பொறுப்பு அமைச்சர் அவர்களுக்கும், எங்களின் அன்றைய முதல்வர் அவர்களுக்கும் நான் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### சமூக வளர்ச்சிக்கான திட்டங்கள்!

1,256 உயர்தர மருத்துவ மையங்களில் 17 சிறப்பு மருத்துவச் சேவை. தமிழ்நாட்டில் 12,525 கிராம ஊராட்சிகளுக்கு மற்றும் 33 விளையாட்டுகளுக்கான உபகரணங்கள் வழங்கும் திட்டம். கைத்தறி நெசவாளர்களுக்குக் கட்டணமின்றி மாதம் 300 யூனிட் மின்சாரம் இலவசம், விசைத்தறி நெசவாளர்களுக்குக் கட்டணமின்றி மாதம் 100 யூனிட் மின்சாரம் இலவசம், மூத்த குடிமக்களைப் பாதுகாக்க அன்புச் சோலை திட்டம், ஆதரவற்ற குழந்தைகளைப் பாதுகாக்க அன்புக் கரங்கள் திட்டம், பணிபுரியும் மகளிர் நலம் காக்க தோழி விடுதிகள். 3,230 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு, 5 ஆண்டுகளில் 79 இலட்சத்து 25 ஆயிரத்து 985 பேருக்கு ரூ.63 ஆயிரத்து 346 கோடி பயிர்க்கடன்.

இவ்வாறு பல திட்டங்களை நடைமுறைப்படுத்தியதோடு, இன்னும் பல முன்னோடி திட்டங்களை அறிவித்து, அனைத்துத் தரப்பு மக்களின் நலனையும் உள்ளடக்கிய சாதனை திட்டங்களை நிறைவேற்றி, தமிழ்நாட்டின் சமூக மறுமலர்ச்சிக்கு பெரும் பங்காற்றி உழைத்த எங்கள் தலைவரின் அயராத முயற்சியால் தமிழ்நாடு தலை நிமிர்ந்து நிற்கின்றது என்பதை உறுதிபடுத்தி NITI Aayog அறிக்கை அளித்து பாராட்டியுள்ளது. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில், உட்கட்டமைப்பில் இந்தியாவின் number 1 மாநிலமாக இருந்த இந்த தமிழ்நாடு இன்று கேள்விக்குறியாக இருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் நான் பதிவு செய்கின்றேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஏற்றம் அடைந்த தமிழ் மக்கள், மாற்றத்தை எண்ணியதால் இன்று ஏமாற்றமே மிஞ்சியது. தந்திரமாகச் செயல்பட்டு, நவீன தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, திடீரென திடுக்கிட்டு ஏமாந்த வேளையில், திக்கறியாது தமிழகம் நின்றுபோனது. த.வெ.க. தேர்தல் அறிக்கையில் மகளிர் உரிமைத் தொகை ரூ.2,500; இலவச கேஸ் சிலிண்டர் 6; மாநிலம் முழுவதும் மகளிருக்கு இலவச பேருந்து பயணம்; வேலையில்லா இளைஞர்களுக்கு மாதம் ரூ.4,000 உதவித் தொகை; முதியோர் உதவித் தொகை ரூ.3,000; விவசாயிகளின் குழந்தைகளுக்கு இலவச கல்வி; கிராமங்களில் வீடில்லா அனைவருக்கும் இலவச வீடு, இப்படியெல்லாம் தேர்தல் அறிக்கையை வெளியிட்டு, இன்று எந்தத் திட்டமும் இந்த நிதிநிலை அறிக்கையில் இல்லை என்பதை இந்த நேரத்தில் நான் நினைவுபடுத்துகின்றேன். அதேபோல், தமிழ் மக்களின் உரிமைக்காக எப்போதும் குரல்

திராவிட முன்னேற்றக் கழகமும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், கழகத் தலைவர் தளபதி அவர்களும், என்றென்றும் சிறுபான்மையின இஸ்லாமியர்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்து, அவர்களுக்கு உறுதுணையாகவும், பாதுகாப்பு அரணாகவும் இருந்து வந்துள்ளனர். ஒன்றிய பா.ஜ.க. அரசு இஸ்லாமியர்களுக்கு எதிராக குடியுரிமை திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்தபோது, கழகத் தலைவர் தளபதி அவர்கள், தலைநகர் சென்னையில் தோழமைக் கட்சித் தலைவர்களையெல்லாம் அழைத்து, அவருடைய தலைமையில் இலட்சம் பேரை திரட்டி, பேரணியாகச் சென்று அந்த எதிர்ப்பினை பதிவு செய்தார்கள்.

### சி.ஏ.ஏ. சட்டத்திற்கு அனுமதியில்லை!

அதைக்கண்டு அன்றைய ஒன்றிய அரசு பின்வாங்கியது. அந்தச் சட்டத்தை நிறுத்தியது. அதுமட்டுமல்ல, 2021 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தபிறகும், அந்தச் சட்டத்தை நாங்கள் தமிழகத்திலே அமல்படுத்த மாட்டோம், CAA, NRC போன்ற திட்டத்தை அமல்படுத்த மாட்டோம் என்ற தீர்மானத்தையும் சட்டமன்றத்தில் நிறைவேற்றியவர் அன்றைய முதலமைச்சராக இருந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் என்பதை இந்த மன்றத்திலே பதிவு செய்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முத்தலாக் உள்ளிட்ட மத்திய பா.ஜ.க. அரசு கொண்டு வந்த அனைத்துத் திட்டங்களுக்கும் அன்றைய முதல்வர் அவர்கள் கடுமையான எதிர்ப்பை பதிவு செய்ததோடு, சட்டப்பூர்வமான போராட்டங்களையும் முன்னெடுத்து, தீர்மானங்களையும் நிறைவேற்றி, அதைப் பதிவும் செய்தார்கள் என்பதை நான் இந்தநேரத்தில் நினைவுபடுத்துகின்றேன். அதுபோல், அன்றையதினம் ஒன்றிய பா.ஜ.க. அரசு இஸ்லாமியர்களால் தானம் செய்யப்பட்ட (மணியடிக்கப்பெற்றது) வஃக்ப் சொத்துகளை அபகரிக்கவேண்டும், அதைக் கொள்ளையடிக்க வேண்டுமென்கின்ற ஒரு தவறான நோக்கத்தோடு, அந்த வஃக்ப் திருத்தச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் நள்ளிரவு 2 மணியளவில் அன்றைக்கு இயற்றினார்கள். நாள் கணக்குகூட இல்லை, அன்று காலை 9 மணிக்கு இந்த அவையில் இதே இடத்தில் முதல்வர் அவர்கள் இருந்தார்கள். 9-30 மணியளவில் அந்தச் சட்டத்தை தமிழ்நாட்டில் நான் அமல்படுத்தவிடமாட்டேன் என்று அந்தத் தீர்மானத்தை முன்மொழிந்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள் என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்படி எந்தெந்த நேரங்களில் எல்லாம் சிறுபான்மையினருக்கு ஆபத்து வந்ததோ, அந்த நேரத்தில் எல்லாம் முதன்மையாக இருந்தவர் அன்றைய முதலமைச்சர் என்பதை நான் இந்தநேரத்தில் பகிர்ந்துகொள்கிறேன். ஆட்சியிலும் பங்கு, அமைச்சரவையிலும் பங்கு போன்ற அரசியல் அதிகாரப் பங்கீடுகள் கிடைத்தவுடன், புரியாமல் சிலர் வரலாற்றையும், சமீபகாலமாக,. வருகிறேன். அதனால் அவர்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய கருத்துகளை பதிவு செய்கின்றேன். இஸ்லாமிய சகோதரர்கள் கோரிக்கை வைக்கும் முன்பே தமிழ்நாடு ஹஜ் இல்லம் நட்சத்திர ஓட்டல் அந்தஸ்த்துக்கு equal ஆக airport பக்கத்தில் ஆலந்தூரில் கிட்டத்தட்ட ரூ.40 கோடி செலவில் அன்றையதினம் அடிக்கல் நாட்டப்பட்டு, இன்றைக்கு கட்டுமானம் நடந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த அவையிலே பதிவு செய்கிறேன். அன்றையதினம் அதற்கு வித்திட்டவர் அடிக்கல் நாட்டியவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் என்பதை இந்த அவையிலே நான் பதிவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவருடன் சமகாலத்தில் அரசியல் பயணத்தை தொடங்கிய தலைவர்கள் பல்வேறு மாநிலங்களின் முதலமைச்சர்களாக இருக்கட்டும், இப்போது மாணவர்களுக்காகப் போராடி ஒன்றிய அரசாங்கத்தை ஆட்டம் காண வைத்த CJP தலைவர்கள் வரை அவருடைய ஆட்சியைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த அவையிலே நான் பதிவு செய்கிறேன்.

அதுபோல், operation என்று சொன்னார்கள். இன்றைய ஆட்சி மாற்றம் வேண்டுமென்று சொல்லி, operation என்று தேர்தல் பிரச்சாரத்திலே பல்வேறு குற்றச்சாட்டுகளைச் சொல்லி, ஆட்சிக்கு வந்தார்கள். இன்றைக்கு operation செய்து நடந்து கொண்டிருக்கிறது. எனது சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கோரிக்கைகள். அதாவது தீவிரவாதிகள் என்று உண்மைக்கு மாறான குற்றச்சாட்டிற்கு ஆளாகி, அதிக இஸ்லாமிய சகோதரர்கள் சிறைச்சாலையில் இருக்கின்றார்கள்.

விடுதலை செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன். என் தொகுதியான மேலப்பாளைத்தைச் சேர்ந்தவர்கள் 4 நபர்கள் இருக்கின்றார்கள். தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 23, 24 நபர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை நீங்கள் பரிசீலித்து, அவர்களை விடுதலை செய்யவேண்டும். அதுபோல் அவர்களுக்கு furlough என்று சொல்லி, 60 நாட்கள் விடுப்பு கொடுக்கிறார்கள். அதையும் உங்களுடைய அமைச்சர் மூலமாக செய்யவேண்டும். அதுபோல் என்னுடைய தொகுதியில் ஒரு 'Y' பாலம் முன்னாள் முதலமைச்சர் அவர்கள் ரூ.125 கோடி என்று அறிவித்து, அதற்கு நிலஎடுப்பு போன்ற ஆயத்தப் பணிகள் எல்லாம் முடிந்துவிட்டன. (மணியடிக்கப்பெற்றது) அந்தத் திட்டத்தையும் நீங்கள் நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனது உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

இந்த அவையில் கருத்துகளைப் பதிவு செய்வதற்கு, என்னை இவ்வளவு நேரம் பேசுவதற்கு அனுமதியளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், அனைத்து மன்ற உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவித்து, விடை பெறுகிறேன்,

### தொகுதிக் கோரிக்கைகள்:

திருநெல்வேலி மாநகராட்சி, திருமலைகொழுந்துபுரத்தில் குடிநீர் திட்டத்தினை முழுமையாக நிறைவேற்றித் தர வேண்டும்.

திருநெல்வேலி மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் புதிய ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடம் கட்டித் தர வேண்டும்.

பாளையங்கோட்டை தொகுதி, சி என் கிராமம்-ரீபுரம் இடையே இணைப்புச் சாலை அமைத்து தர வேண்டும்.

பாளையங்கோட்டை தொகுதி, தாமிரபரணி ஆற்றில் மேலநத்தத்திற்கும் கருப்பந்துறைக்கும் இடையேயுள்ள தரைமட்ட பாலத்தை உயர்மட்ட பாலமாக அமைத்து தர வேண்டும்.

பாளையங்கோட்டை தொகுதி, மேலப்பாளையம் ஹாமிம்புரம் மாநகராட்சி ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகவும், பெருமாள்புரம் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகவும் தரமுயர்த்த வேண்டும்.

இவ்வாறு மு.அப்துல் வகாப் பேசினார்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மத்திய பகுதி 22 வது வட்ட கழக இளைஞர் அணியின் பாக அமைப்பாளர் எம். சுரேஷ் - எல்.ஜனனி இணையரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கேபிள் த.வேல்கணேசன், வட்ட கழக செயலாளர்கள் தச. கரிகாலசோழன், சாலை கணேசன், சுற்றுசூழல் அணியின் மாவட்ட அமைப்பாளர் வெங்கடேசன், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்கள் மணலி எஸ்.ஸ்டாலின், பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் செ.விக்னேஷ், சி.எம்.பாபு, மோகன், வட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் சகா.செந்தில், தயாநிதி, மு. ஆகாஷ், புழல் சித்தர், பிரித்திவிராஜ், அஜித், தணிகாச்சலம், சுடர்ஒளி, மோகன், தீபக், ஜெகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## தமிழக மீனவர்களின் படகு மீட்பு – நிரந்தரத் தீர்வு காண

# ராமேஸ்வரம் மீனவர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தம்!

ராமேஸ்வரம், செப்.1- மீனவர்கள் மற்றும் படகுகளை விடுவிக்க கோரி போராட்டத்தை தொடங்கிய மீனவர்கள் மீனவர்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண ஒன்றிய மற்றும் தமிழ்நாடு அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

தங்கச்சிமடத்தில் முதல் தொடர் போராட்டங்களில் ஈடுபட மீனவர்கள் முடிவு

இலங்கை சிறையில் உள்ள மீனவர்கள் மற்றும் படகுகளை விடுவிக்க வலியுறுத்தி ராமேஸ்வரம் மீனவர்கள் காலவரையற்ற போராட்டத்தை தொடங்கியுள்ளனர்.

மீன்பிடி தடைக்காலம் நிறைவடைந்து ராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து மீன்பிடிக்க சென்ற 3 படகுகள் மற்றும் 29 மீனவர்களை இலங்கை கடற்படையினர் சிறைபிடித்தனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் மற்றும் படகுகளை விடுவிக்க கோரியும், இலங்கை கடற்படையினரின் தொடர் தாக்குதலுக்கு ஒன்றிய மற்றும் தமிழ்நாடு அரசுகள் தீர்வு காண வலியுறுத்தியும், இன்று முதல் ராமேசுவரம் மீனவர்கள் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தை தொடங்கி உள்ளனர்.

வேலை நிறுத்த போராட்டம் காரணமாக 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை. ராமேஸ்வரம் துறைமுகத்தில் 600க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் நிறுத்தப்பட்டுள்ளன. போராட்டத்தை தீவிரப் படுத்தும் நோக்கில் இன்று முதல் தங்கச்சிமடத்தில் தொடர் போராட்டங்கள் மேற்கொள்ள உள்ளதாகவும் மீனவர்கள் அறிவித்துள்ளனர்.